பக்கங்கள் 12 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை 04.06.2024 அதிர்வு 309

## பாக்கு திருடச் சென்றவர் மின்சாரம் தாக்கி மரணம்

(ராமு தனராஜா)

பதுளை, புஸ்ஸல்லகொல்ல நுகே சந்திப் பகுதியில் உள்ள காணியொன்றில் திருட்டுத்தனமாகப் பாக்கு பறிக்கச் சென்ற இளைஞர் ஒருவர்

04▶



# இந்தியத் தேர்தல் திருவிழா முடிவு

- நரேந்திர மோடி 293 ஆசனங்களுடன் பிரதமராக நீடிப்பு
- தனித்து ஆட்சியமைக்கும் வலிமையை இழந்தது பா.ஜ.க.
- 233 இடங்களுடன் காங்கிரஸ் கூட்டணி மீள விஸ்வரூபம்
- தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி அசைக்க முடியாத வெற்றி

*(விவரம் 11 ஆம் பக்கத்தில்)*



## சீரற்ற காலநிலையால் 26 பேர் பரிதாபச் சாவு!

### 41 பேர் படுகாயம்

இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 41 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரி வித்தார்.

04▶

## எரிவாயுக்களின் விலை குறைப்பு



இலங்கையில் இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அந்த நிறுவனத்தின்

04▶



# பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

## 17 ஆம் திகதி மஹிந்த விசேட அறிவிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 17 ஆம் திகதி விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அந்த விசேட அறிவிப்பு மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்பதாகவே இருக்கும் எனவும் தெரியவருகின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன அறிவித் திருந்தாலும் மொட்டுக் கட்சி மௌனம் காத்து வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை வளைத்துபோடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியுள்ளது.

அந்தக் காலப்பகுதிக்குள் ரணில் அதைச் செய்யத் தவறும் பட்சத்தில் 17 ஆம் திகதி தம்மிக்க பெரேராவை மொட்டுக் கட்சி வேட்பாளராக மஹிந்த பெயரிடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட 15 அமைப்புக்களின் சொத்துக்களும் நிதிகளும் முடக்கம்

## வெளியானது விசேட வர்த்தமானி அறிவித்தல்

இலங்கை அரசு 15 தீவிரவாத அமைப்புக்களின் சொத்துக்களை முடக்குவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

15 தீவிரவாத அமைப்புக்கள், அந்த அமைப்புகளுடன் தொடர்புடைய 210 பேரின் சொத்துக்கள், நிதிகள், பொருளாதார வளங்களைச் செயல் இழக்கச் செய்வதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தேசிய தவ்ஹீத்ஜாமத் உட்பட பல அமைப்புகளின் நிதிகளும் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன என்று வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனவும், பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட 113 பேரின் பணத்தையும், சொத்துக்களையும் முடக்குவதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.





# பிரான்ஸில் நடந்து முடிந்துள்ள தமிழ் மொழிப் பொதுத் தேர்வு!





பிரான்ஸில் தமிழ் மொழிப் பொதுத் தேர்வு-2024 நடந்து முடிந்துள்ளது. மே 4 இல் புலன்மொழி வளத்தேர்வுடன் தொடங்கிய இத்தேர்வானது கடந்த (01) ஆம் திகதி சனிக்கிழமை எழுத்துத் தேர்வுடன் நிறைவுற்றுள்ளது.

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தின் ஏற்பாட்டில் 22 ஆவது ஆண்டாக நடைபெற்ற இந்தப் பொதுத் தேர்வுக்கான தேர்வு வினாத்தாள்களைத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை வழங்கி வருகிறது.

இல் – து – பிரான்சில் 53 தமிழ்ச் சோலைகள் மற்றும் வெளி மாகாண முதன்மை நகர்களிலுள்ள 12 தமிழ்ச் சோலைகள் மற்றும் 5 தனியார் பள்ளிகள் என 5 ஆயிரத்து 563 மாணவர்கள் இந்தத் தேர்வுகளில் தோற்றியிருந்தனர்.

இல் – து – பிரான்ஸ் தேர்வர்களுக்கான எழுத்துத் தேர்வு அரச பொதுத் தேர்வு நடுவகமான மைசன் டெஸ் தேர்வுகள் அர்குயில் நகரசபை மற்றும் பிரான்சு அரசின் அரச அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெற்றது. இந்தத் தேர்வு நடுவகத்தில் தமிழ் மொழிப் பொதுத் தேர்வு 17 ஆவது தடவையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

5 ஆயிரத்து 279 தேர்வர்கள் தோற்றிய இந்த மண்டபத்துக்கான பாதுகாப்பு, ஒருங்கமைப்பு, உணவுப் பரிமாற்றம் என்பவற்றை பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் அதன் உப கட்டமைப்புகளும் திட்டமிட்டு நடத்தியிருந்தன.

பிரான்சில் உயர்கல்வித் தேர்வில் தமிழை விருப்பப் பாடமாக மீண்டும் கொண்டுவரக்கோரி, தமிழியல் பட்டப் படிப்பு மாணவர்கள் தேர்வு மண்டப சுற்றுச் சூழலில் நின்றிருந்த பெற்றோர்களிடம் கையழுத்து வாங்கிக் கொண்டனர்.

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2024 சிறப்புற நிறைவுறப் பங்காற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மொழியே இனத்தை இயக்கும் அச்சாணி. காலப்பெருவோட்டத்தில் கரைந்துபோகாத் தமிழ்மொழி எமது விடுதலைக்கான ஓட்டத்தை விரைவுபடுத்தும் ஆணிவேர். இந்த ஆணிவேரின் அடியொட்டி அசையும் தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகத்தின் 22 ஆவது பொதுத்தேர்வில் அரும் பணியாற்றிய தமிழார்வலர்களுக்கு நன்றி.

புலன்மொழி வளம், எழுத்து என ஈராற்றல் கொண்ட இரண்டாம் மொழிக் கல்விக்கு உரிய மதிப்பீட்டுத்தாள்களை தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை அணியப்படுத்தித் தந்திருந்தது.

புலன்மொழிவளத் தேர்விற்கு மண்டபங்களைத் தந்துதவிய நகர சபைகளுக்கும் அதற்கான நிர்வாக நடைமுறைகளை ஆற்றிய தமிழ்ச்சங்களுக்கும் எமது நன்றி.

இல்–து–பிரான்சு எழுத்துத் தேர்வு சிறப்புற நடந்தேற ஒத்துழைத்த அரச தேர்வு மண்டபத்தினருக்கும் ஆர்க்குயில் நகரசபைக்கும் போக்குவரத்துத் தன்னாட்சி ஆணையகத்ததுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகப் பொறுப்பாளர் சா. நாகயோதீஸ்வரன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.



# தோட்ட அதிகாரிக்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துக்குகே கீழ் இயங்கும் தலவாக்கலை நானுஓயா தோட்டப் பிரிவில் ஓய்வுபெற்ற தொழிலாளர் ஒருவரை நேற்று மீண்டும் பணிக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று தோட்ட அதிகாரி கூறியுள்ளார்.

அதனை மறுத்த தொழிலாளரைத் தகாத வார்த்தைகளால் தரக்குறைவாகப் பேசி அவரைத் தாக்கத் தோட்ட அதிகாரி முற்பட்டுள்ளார். இதனால் தோட்ட மக்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கு எதிராகவும், மேலதிக நேரம் தொழில் செய்தாலும் உரிய கொடுப்பனவு கிடைப்பதில்லை எனவும், வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றது எனவும், தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு எவ்வித சலுகைகளும்




கிடைப்பதில்லை எனவும், சிறிய தவறு செய்தாலும் கடுமையாக எச்சரிக்கின்றனர் எனவும் தெரிவித்தும், தோட்ட அதிகாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

# வெள்ள அனர்த்தம் பார்க்க படகில் சென்ற இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பலி

வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளைப் பார்வையிட ஆற்றில் வினோதப் பயணம் சென்ற இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 22 வயதான தமித் குமார என்ற இளைஞரே பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புலத்சிங்கள, திவலகட பகுதியில் இடம்பெற்ற வெள்ள அர்த்தங்களைப் பார்ப்பதற்காகப் பிரதேச இளைஞர் குழு ஒன்று ஆற்றில் படகு ஒன்றில் ஏறி வினோதமாகச் சென்று கொண்டிருக்கையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படகை ஓட்டிச் சென்ற இளைஞர் தனது கையில் வைத்திருந்த மூங்கிலை உயர்த்தும்போது சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பி ஒன்றில் பட்டதால் அவர் ஆற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளார். அதன் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, அந்தப் படகில் பயணித்த மேலும் 19 இளைஞர்கள் மின்சாரத் தாக்கத்துக்கு உட்பட்ட போதிலும் அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பாக்கு...

மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பதுளை, ஹம்பாவெல பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர், புஸ்ஸல்ல கொல்ல பகுதியில் உள்ள பாக்குத் தோட்டங்களில் இரவு வேளையில் மற்றுமொரு நபருடன் பாக்கு திருடச் சென்றுள்ளார் என்றும், இருவரும் போதைப்பாவனைக்கு அடிமையானவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

திருடர்களிடம் இருந்து பாக்கு மரங்களின் உள்ள பாக்குகளைப் பாதுக்க பாக்கு மர மின் கம்பி போடப்பட்டு இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்தவருடன் சென்றார் எனக் கூறப்படும் அதே பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் இன்று காலை பதுளை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உபுல் சந்தன, பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகர ஆகியோரின் பணிப்புரையின் பேரில், தலைமையகப் பிரதான பொலிஸ் பரிசோதகர் தி டி.எம்.ரத்நாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சீரற்ற...

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், நாட்டில் 23 மாவட்டங்களில் 262 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 33 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

### எரிவாயுக்களின்...

தலைவர் முதித்த பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 3 ஆயிரத்து 790 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 60 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,522 ரூபாவாகும்.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 28 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 712 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது என்று லாஃப்ஸ் நிறுவனம் இன்று பிற்பகல் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 160 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 3 ஆயிரத்து 680 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 65 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,477 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை சுகாதார பணிமனையில் தேசிய சுற்றாடல் வாரம் முன்னெடுப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு நீர் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமணையில் நீரை பயன்படுத்தும் இடங்களில் "எமது வீடுகளில் பாவிப்பது போன்று நீரை சிக்கனமாகப் பாவிப்போம்" எனும் அறிவுறுத்தல் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் நீரைப் பயன்படுத்தும் இடங்களில் உள்ள நீரிணைப் புக்களில் ஒழுக்குகள் கசிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு அவற்றைச் சீர்செய்யும் பணிகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

கல்முனைப் பிராந்திய சுற்றுச் சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் ஒருங்கிணைப்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிராந்திய தாய், சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். றிஸ்பின் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தின கொடி விற்பனை சாய்ந்தமருதில்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் சமுர்த்திக் கொடி விற்பனை சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைவாக சாய்ந்தமருது – 07 ஆம் பிரிவில் சமுர்த்திக் கொடி விற்பனை ஆரம்ப நிகழ்வு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். நூருல் றிபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சமுர்த்தி முகாமைத் துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரிவுமட்ட சமுர்த்தி கொடி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

இதில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வைத்தியத்துறைக்குத் தெரிவான தலவாக்கலைச் சகோதரிகள்



(தலவாக்கலை)

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற சகோதரிகளான பாலமுரளி மோகமித்ரா 2ஏபி பெறுபேறுகளை பெற்று மாவட்டத்தில் 9 ஆவது நிலையையும் பாலமுரளி விசாலி 2ஏசி பெறுபேறுகளை பெற்று மாவட்டத்தில் 44 ஆவது நிலையையும் பெற்று வைத்திய துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலவாக்கலை மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்திய மக்களின் தீர்ப்பு

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது அயல் தேசத்தில் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகின்றது. ஏழு கட்டங்களாக நடைபெற்ற வாக்களிப்பில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி இன்று பெரும்பாலும் முடிவுக் கட்டத்தை நெருங்கி விட்டது.

பத்து ஆண்டுகள் இந்தியாவில் அசைக்க முடியாத ஆட்சியை முன்னெடுத்த பிரதமர் நரேந்திர மோடி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகாரத்தை தக்க வைத்திருப்பதற்கு இந்தத் தேர்தல் மூலம் மக்கள் அனுமதி அளித்திருக்கின்றார்கள்.

ஆயினும், இது அவரும் அவரது கட்சியினரும் எதிர்பார்த்த தேர்தல் முடிவு அல்ல. அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்த 400 ஆசனங்கள் என்ற இமாலய வெற்றியை மக்கள் பகல் கனவாக்கி விட்டார்கள்.

எனினும், ஆட்சி அமைப்பதற்கு தேவையான 272 ஆசனங்கள் என்ற இலக்கைத் தாண்டி அவரது பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 300க்கு அண்டிய ஆசனங்களை மக்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

இதில் பாரதீய ஜனதா கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே தென்படுகின்றன. தன்னுடைய கூட்டணிக் கட்சிகளின் வலுவான ஆதரவுடன் அரசாங்கத்தைக் கொண்டிழுக்க வேண்டிய கட்டாயத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தரப்புக்கு இந்திய மக்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

ஆட்சி அமைக்கும் வாய்ப்பை தொடர்ந்து மூன்றாவது தடவையாக இந்தியாவின் பழம்பெரும் கட்சியான காங்கிரஸ் இழந்ததாயினும் அதன் தேர்தல் பெறுபேறுகள் மெச்சத்தக்கவை தான்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் நலிவுற்றுச் சுருங்கிக் கிடந்த காங்கிரஸுக்கு மீண்டும் உயிரூட்டியமை மட்டுமல்லாமல், சிதறுண்டு கிடந்த பல்வேறு பிராந்திய கட்சிகளையும் ஒன்றிணைத்து, எதிர்க்கட்சிகளின் பலமான கூட்டணி ஒன்றை ‘இண்டியா’ என்ற பெயரில் உருவாக்கி. இந்திய ஜனநாயகத்தின் காவலர்களாக எதிரணிகளைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றது காங்கிரஸ் தலைமை.

கடந்த பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைமை பதவியை ஏற்பதற்கு தேவையான 51 ஆசனங்களை கூடத் தனித்துப் பெறாத காங்கிரஸ் கட்சி, இம்முறை வலுவான எதிர்க்கட்சிக் கூட்டமைப்பைத் தன் தலைமையில் உருவாக்கி நாடாளுமன்றத்தில் நிலைநிறுத்தியிருப்பதன் மூலம் இந்திய ஜனநாயகமும் அதன் மாண்பும் செழிப்புறுவதற்கு வழி செய்திருக்கின்றது.

அது மாத்திரமல்ல, பிரதான தேசிய கட்சிகள் மட்டுமல்லாமல் பல மாநிலங்களிலும் மாநில கட்சிகள் தங்களுடைய வலிமையை ஆழமாகப் பதித்தமை மூலம் தேசிய கட்சிகளின் மேலாண்மைத் தனித்துவ ஆதிக்கத்தை அவை கட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றன என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

இந்திய ஜனநாயகத்தை மேலும் செழுமைப்படுத்தும் ஒரு பெறுபேறாக இதனைக் கருத முடியும்.

தமிழ்நாட்டிலும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி எதிர்பார்த்தபடி பெருவெற்றியை ஈட்டியிருக்கின்றது.

தனித்தே நிற்பேன் என்று தமிழ் தேசிய குரல் எழுப்பிய சீமான் கூட பல தொகுதிகளில் தமது வலிமையான பிடியைக் காட்டி இருக்கின்றார் என்பதும் கவனிக்கத்தக்கது.

நானூறு தொகுதிகளுக்கு மேல் வென்று இந்தியாவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று ஆரவாரம் பண்ணிய பாரதீய ஜனதாக் கட்சியின் தலையில் இந்திய மக்கள் ஒரு குட்டுப் போட்டு அளவோடு அதனை அடக்கி, ஆட்சியை கையளித்திருக்கின்றார்கள் என்பதே இந்த மக்கள் தீர்ப்பின் வியாக்கியானம்.

ஆகக்கூடிய தொகுதிகளை கொண்ட உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி நடக்கின்றது. அங்கு தான் உரிய பாடம் பாரதீய ஜனதா கட்சிக்குப் படிப்பிக்கப்பட்டிருக்கின்றது என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

இந்துத்துவா ஆட்சி என்ற பெயரில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக - குறிப்பாக இஸ்லாமிய மக்களுக்கு எதிராக - மோடி உட்பட பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் தெரிவித்த எகத்தாளக் கருத்துகள்தான் அது போன்ற பெரிய மாநிலங்களில் அக்கட்சிக்குப் பெரும் பின்னடைவைத் தேடித்தந்தன என்பதும் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

இந்த வாக்குப் புரட்சி மூலம் இந்திய மக்கள் தந்திருக்கும் பாடத்தை சரிவரப் புரிந்து கொண்டு, அதன் அரசியல் தலைவர்கள் செயற்பட வேண்டும்.



# இளைஞனைத் தாக்கிய வர்த்தகருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுப் பிணை!

(பாறுக் ஷிஹான்)

கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதில் ஏற்பட்ட முரண்பாட்டில் இளைஞனை தாக்கிக் காயப்படுத்திய நகைக்கடை வர்த்தகருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. தலைமறைவாகியுள்ள மற்றுமொரு சந்தேக நபரைக் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதில் ஏற்பட்ட முரண்பாட்டால் இடம்பெற்ற மோதல் தொடர்பிலான வழக்கு நேற்று திங்கட்கிழமை (03) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸாரின் சமர்ப்பணம் உள்ளிட்ட வாதி பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் ஆகியோரின் சமர்ப்பணம் வாதங்களின் அடிப்படையில, பிணையில் விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபரான நகைக் கடை உரிமையாளருக்கு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

தாக்குதலில் ஈடுபட்டு தற்போது வரை தலைமறைவாகியுள்ள மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு கல்முனை தலைமையக பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் வழக்கை எதிர்வரும் ஜுன் மாதம் 10 ஆந் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்தார்.

# மாற்றுப் பயிர்களைப் பாதுகாக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் விடுப்பு



## பணிப்பாளர் திருமதி சகிலா பாணு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் வயல் நிலங்களில் மாற்றுப் பயிர் செய்த விவசாயிகள், மன்னார் பகுதியில் மழை பெய்து வருவதால் வயலில் தேங்கி வரும் நீரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பாணு மன்னார் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது நெற் செய்கைக்கு மாற்றுப் பயிராக மன்னார் விவசாயிகள் வயல்களில் பயிறு மற்றும் கடலை விதைத்துள்ளனர்.

தற்பொழுது மன்னாரில் கடும் மழை பெய்து வருவதால் வயல்களில் செய்கை பண்ணப்பட்டிருக்கும் கடலை மற்றும் பயறு ஆகியவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாது இருப்பதற்கு சம்பந்தப்பட்ட விவசாயிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்பயிர் செய்கை தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் பரவலாக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

அரசின் உதவியுடன் 1500 ஏக்கர் செய்கைப் பண்ணப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி சகிலா பாணு மேலும் தெரிவித்தார்.



# பொருளாதார முன்னேற்றப் பாதையை வருங்கால சந்ததிக்குக் காட்ட வேண்டும்

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு



(த.சுபேசன்)

வருங்கால சந்ததிக்குப் பொருளாதார முன்னேற்றத்துக்கான பாதையைக் காட்ட வேண்டியது எம் அனைவரதும் பொறுப்பு என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது மாகாண பிள்ளைகள் சிலர் பல்கலைக்கழகம்வரை பயில்கின்றனர். மேலும் சிலர் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடிச் செல்கின்றனர். பெரும்பாலானவர்கள் உரிய தொழில்வாய்ப்பு இன்றி நாட்டில் உள்ளனர்.

பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களில் பலர் கலைப் பிரிவில் பட்டத்தைப் பெற்றுவிட்டு தொழில் வாய்ப்பை பெற முடியாமல் திண்டாடுகின்றனர்.

அரசு, சேவையில் உள்ளவர்களுக்கே சம்பளம் வழங்க முடியாத நிலையில் உள்ளது. இந் நிலையில் புதிய தொழில் வாய்ப்பை அரசு வழங்கினால் அந்தச் சுமை மக்கள் மீதே விழும்.

இந்த இக்கட்டான தருணத்தில் தனியார் வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது கட்டாயம்.

எமது பிள்ளைகளுக்குச் சர்வதேச வேலைச் சந்தையில் தேவைப்படுகின்ற வேலை வாய்ப்புக்களுக்கு ஏற்ற கல்வி மற்றும் தொழில் தகைமைகளை கொடுக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேச தரம் வாய்ந்த மாணவர்களை உருவாக்கும் நோக்கிலேயே என்னால் 'என் கனவு யாழ்.' அக்கடமி ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக நாம் டி.பி. கல்வி நிலையத்துடன் கைகோர்த்துள்ளோம்.

'என் கனவு யாழ்.' அக்கடமி ஊடாக யாழ். மாவட்டத்தில் 9 ஆவது கோடிங் கற்கை நிலையம் (தொழில்நுட்பம் சார்ந்த கணினி கற்கை) விரைவில் வேலணையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சகல கிராம மாணவர்களும் பயனடைய வேண்டும் என்ற நோக்கிலேயே முற்றுமுழுதாக இலவசமாக சகல பிரதேசங்களிலும் இந்தக் கற்கை நிலையத்தை ஆரம்பிக்கின்றேன்.

இதனூடாக மாவட்டத்தில் தற்போது வரை பத்தாயிரம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்த முதலீட்டின் ஊடாக எதிர்கால சந்ததி பொருளாதார முன்னேற்றத்துடன் கூடிய வளமான வாழ்வை வாழ வேண்டும். அதுவே எனது கனவும் மாவட்ட மக்களுடைய கனவும் கூட.- என்றார்.

# ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா





யாழ். ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வும் ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை அதிபர் சி.நேதாயி தலைமையில் நேற்று முன்தினம் (02) இடம் பெற்றன.

ஆரம்பப் பாடசாலைக்கு மிகவும் தேவையாக இருந்த வகுப்பறை கட்டடத் தொகுதி கையளிப்பு நிகழ்வில் ஸ்தாபக கர்த்தா ரகுநாதன் தயாளினியுடன், ர.டிசாந்தன் இணைந்து கொண்டார்.

அமரர் நல்லையா பவளராணி ஞாபகார்த்தமாக இந்தப் பாடசாலை கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.





# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளில் இருப்போருக்கு உறுதிகள்

(வாஸ் கூஞ்ஞ)

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சியால், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகளில் குடியிருப்போருக்கு உறுதி பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்குச் சொந்தமான நிலத்தில் வசிக்கும் 1400 குடும்பங்களில் முதற்கட்டமாக 600 குடும்பங்களுக்குக் காணி உறுதி வழங்குவதற்கான பணிகள் தற்போது இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தானின் மன்னார் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் இடம் பெற்று வருகின்றது.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் இந்தக் காணி சம்பந்தமாக நீண்ட காலம் தொடரான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அண்மையில் இந்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இதன் அடிப்படையில் தலை மன்னார் பாலமீன் ஓடை பகுதியில் உள்ள 800 குடும்பங்களுக்கும் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சோழ மண்டலகுளம் பகுதியில் உள்ள 100 விவசாய குடும்பங்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்கும் குறித்த காணிகள் வழங்கப்பட உள்ளன.

# ஐ.தே.க. மருதமுனை வட்டாரத்துக்கு புதிய அமைப்பாளர் ஒருவர் நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)



ஐக்கிய தேசிய கட்சியின் மருதமுனை 04 மற்றும் 05 ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக டிலிப் நௌஷாட் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற கட்சி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வின்போது கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளரான டிலிப் நௌஷாட், பொது அமைப்புகள் ஊடாக சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். விஞ்ஞான பட்டதாரியான இவர் தற்போது கல்முனை மாநகர சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் அக்கல்லூரியின் முன்னாள் அதிபரான மர்ஹூம் முஹம்மது அபூபக்கரின் கனிஷ்ட புதல்வர் ஆவார்.







# களுவாஞ்சிக்குடி சக்தி மகளிர் இல்ல வெள்ளிவிழா நிகழ்வு!

(பழுவூரான்)

களுவாஞ்சிகுடி சக்தி மகளிர் இல்ல வெள்ளி விழா, சக்தி மகளிர் இல்லப் பணிப்பாளர் தம்பிப்பிள்ளை உதயதாஸ் தலைமையில் சக்தி இல்ல வளாகத்தில் சனிக்கிழமை (01) இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

சக்தி மகளிர் இல்லமானது மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பங்காரு அடிகளாரின் ஆசியுடன் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள், ஆதரவற்ற சிறார்களுக்கு கல்வி, உணவு, உறைவிடம் மற்றும் ஆன்மீகக் கல்வியளித்து ஒழுக்கத்துடன் பராமரித்து வருகின்றது.



இல்லத்தில் கல்வி கற்றுச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவிகளுக்கும், மாகாண மட்ட மற்றும் தேசிய ரீதியில் திறமையை வெளிக்காட்டிய மாணவிகளுக்கும் நினைவுச் சின்னங்கள் அதிதிகளால் வழங்கப்பட்டன.

மாவட்ட அரச அதிபருக்கு சக்தி இல்ல பணிப்பாளரால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரச உயர் அதிகாரிகள், பிரமுகர்கள், சக்தி இல்ல உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார் ரிஷாட்!

அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்திருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கடந்த சனிக்கிழமை (01) அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை பிரதேசங்களுக்குக் களவிஜயம் மேற்கொண்டார். அவர் பிரதேசவாழ் மக்களுடன் கலந்துரையாடி மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.






இந்தியாவில் மக்களவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. தேர்தலுக்கு பிந்திய கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. கூட்டணி 350 தொகுதிளுக்கு மேல் பிடிக்கும் என கணிக்கப்பட்டது.

ஆனால், வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நிலையில் பா.ஜ.கவுக்கு உத்தர பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, பீகார் மாநிலங்களில் பலத்த அடி விழுந்துள்ளது.

இதனால் மத்தியம் 2 மணி நிலவரப்படி பா.ஜ.க. கூட்டணி 295 இடங்களில் முன்னணியில் உள்ளது. இப்படியே கடைசி சுற்று வரை சென்றால் பா.ஜனதா கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உள்ளது.

கடந்த முறை பா.ஜ.க. 303 தொகுதியில் தனித்து வெற்றி பெற்றிருந்தது. தற்போது 241 தொகுகளில் தான் முன்னணி பெற்றுள்ளது. இது பா.ஜ.க. வுக்கு மிகப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. தெலுங்கு தேசம் (16), ஐக்கிய ஜனதா தளம் (14) ஆகியவை பா.ஜனதா ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தாக வேண்டும் என்ற நிலையில் உள்ளது.

அதேவேளையில் கடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 44 இடங்களில்தான் வெற்றி பெற்றிருந்தது. இந்த முறை 50 இடங்களை கூட தாண்டாது என பா.ஜ.க. தலைவர்கள் தொடர்ந்து கூறி வந்தனர்.

ஆனால் காங்கிரஸ் 99 இடங்களில் தற்போது முன் னிலை வகிக்கிறது. கடந்த முறையை விட தற்போது இரண்டு மடங்கு இடங்களில் வெற்றி பெறும் சூழ்நில உருவாகியுள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான "இண்டியா" கூட்டணியில் 28 கட்சிகள் இடம்பெற்றன. பல தலைவர்கள் ஒன்று கூடி பிரதமர் மோடிக்கு எதிராக பிரசாரம் செய்தனர். பிரதமர் மோடி மீது எதிர்கட்சிகள் குற்றச்சாட்டுகள், கடும் விமர்சனம் வைத்தனர். இதனால் பா.ஜ., ஓட்டுக்கள் சற்று சரிந்துள்ளது. கடந்த முறை 52 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றிய காங் கூட்டணி தற்போது 200 க்கும் மேற்பட்ட தொகுதி களைக் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# ஆரம்பித்தது பேரம் பேசல்!

## துணை பிரதமர் பதவி தருவதாக நிதீஷ்குமாருக்கு 'ஐஸ்' வைப்பு!



இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அக்கூட்டணியில் இடம்பெற்ற நிதீஷ்குமார் மற்றும் சந்திரபாபு நாயுடுவை தங்கள் பக்கம் இழுக்க "இண்டியா" கூட்டணி முயன்று வருகிறது. இதில் நிதீஷ்குமாருக்கு துணை பிரதமர் பதவி தருவதாக கூறி கூட்டணிக்கு அழைத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி ▼




தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அபார வெற்றி பெற்றுள்ளது. "நாற்பதும் நமதே" என்று தி.மு.க. தலைவர் ஸ்டாலின் சொல்லியது போல் 40 இலும் வெற் றியை உறுதிப்படுத்தியுள்ளது. எதிர்கட்சியான அ.தி.மு.க. மண்ணை கவ்வியது. ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இதன் கூட்டணி யான தே.மு.தி.க. வேட்பாளர் விஜயபிரபாகர் விருதுநகர் தொகுதியில் முன்னிலையில் நின்று பின் தோற்றார்.

தமிழக வரலாற்றில் பா.ஜ.க, இது வரை இல்லாத அள வுக்கு பல தொகுதிகளில் அ.தி.மு.கவை பின்னுக்குத் தள்ளி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது. , 7 தொகுதிகளில் அ.தி.மு.க. 3 வது இடத்திற்கும் 3 தொகுதிகளில் 4ஆவது இடத்திற்கும் தள்ளப்பட்டது. மத்திய சென்னை, தென் சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத் தூர், நீலகிரி, புதுச்சேரி, வேலூர், தேனி, ராமநாதபுரம் தொகுதிகள் பா.ஜ.கவுக்கு 2 ஆவது இடத்தை தந்துள்ளன.

30 தொகுதிகளில் அ.தி.மு.க. 2 ஆவது இடத்தை பிடித் துள்ளது. பா.ஜ.க. கூட்டணி 10 தொகுதிகளில் 2 ஆவது இடத்திற்கு வந்துள்ளது. பா.ஜ.கவுடனான கூட்டணியை அ.தி.மு.க. முறித்து கொண்டதால் பழனிசாமி எதிர்வினை முடிவை சந்தித்து இருக்கின்றார் என அரசியலாளர்கள் கூறுகின்றனர்.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், இடதுசாரிகள் , ம.தி. மு.க.,விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ் லிம்லீக், கட்சிகள் இடம் பெற்றன. தி.மு.க.வை பொறுத்த வரை எப்போதும் உள்ள தி.மு.க. வாக்குகள் சிதறவில்லை. மேலும் சமீபத்திய பெண்களுக்கான உரிமைத்தொகை மாதம் ஆயிரம், பெண்களுக்கு இலவச பஸ், மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி என்ற திட்டங்கள் வரவேற்பை பெற்று தி.மு.கவுக்கு பெண்களின் ஆதரவு ஓட்டாக மாறியது.

### அண்ணாமலையின் வியூகம்

பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில், சரத்குமார் தலைமையிலான சமத்துவமக்கள் கட்சி பா.ஜ.கவுடன் இணைக்கப்பட்டது. மேலும் பாட்டாளிமக்கள் கட்சி, வாசனின் தமிழ்மாநில காங்கிரஸ், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலான அவரது ஆதரவாளர்கள், தின கரனின் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயகக் கட்சி, ஏ.சி.சண்முகத்தின் புதியநீதி கட்சி, ஜான்பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், யாதவ மக்களை கொண்ட தேவநாதனின் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் ஆகியன கூட்டணி அமைத்து போட்டியிட்டன. பா.ஜ.கவில் 8 அரசியல் கட்சி களும் மேலும் பல்வேறு அமைப்புகளும் ஆதரவு அளித்தன. பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையில் அரசியல் வியூகம், அவரது பிரசாரம், இளைஞர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. மேலும் தி.மு.கவின் ஊழல்கள் தொடர்பான பட்டி யல் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி தமிழக மக்களை தன் பக்கம் திரும்பி பாரக்க வைத்தார

அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க., புதிய தமிழகம் மற்றும் சில உதிரிகட்சிகளே இடம்பெற்றன. இதில் மிக "வீக்" கான கூட்டணியாக அ.தி.மு.க. அமைந்தது. தனிப்பட்ட கருத்து வேறுபாட்டில் அண்ணாமலையுடன் பழனிசாமி மோதல் போக்கை கடைபிடித்தார். இதுவே இவருக்கப் பெரும் பாதகமாக அமைந்து விட்டது. இந்தியாவுக்கான தேர்தலில் யார் பிரதமர் என்று கை காட்டும் தேர்தலில் அ.தி.மு.க. இந்த நிலைப்பாட்டை மறந்து தேர்தலை சந்தித்தது பெரும் சறுக்கலாக அமைந்து விட்டது என கூறலாம்.

### சீமான் கட்சிக்கு ஓட்டு

நாங்க எப்போதும் தனித்தே போட்டியிடுவோம் என்ற சீமானின் நாம்தமிழர் கட்சிக்கு கணிசமாக எல்லா தொகுதி களிலும் வாக்குக் கிடைத்துள்ளது. பல தொகுதிகளில் 3 ஆவது, 4 ஆவது இடத்திற்கு அக்கட்சிவந்துள்ளது.

# சில வன்முறை வழக்குகளில் இருந்து இம்ரான் கானை விடுவித்துத் தீர்ப்பு!



இஸ்லாமாபாத், ஜுன் 04

சில வன்முறை வழக்குகளில் இருந்து இம்ரான் கான் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது, அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்த நிலையில், 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டது. புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றார்.

இம்ரான் கான் மீது கிட்டத்தட்ட 200 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் சில வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் அவர் சிறையில் உள்ளார். அவர் மீதான மற்ற வழக்குகள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அவ்வகையில், 2022 இல் ஆட்சி கவிழ்ப்புக்குப்பின் நடந்த பேரணியின் போது பதிவு செய்யப்பட்ட இரண்டு வன்முறை-நாசவேலை வழக்குகளில் இருந்து இம்ரான் கானை இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் செசன்ஸ் கோர்ட்டு இன்று விடுதலை செய்தது. இம்ரான் கான் தவிர, முன்னாள் வெளியுறவுத் துறை மந்திரி ஷா மஹ்மூத் குரேஷி, முன்னாள் தகவல் தொடர்பு துறை மந்திரி முராத் சயீத் மற்றும் அவரது கட்சியின் (பி.டி.ஐ.) பிற தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதத் தொடக்கத்தில், வேறு இரண்டு நாசவேலை வழக்குகளில் இருந்து இம்ரான் கானை இஸ்லாமாபாத் ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டு விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது.





# தாம் முன்னர் தடை விதிக்க முயன்ற ‘டிக் டாக்’கில் இணைந்தார் ட்ரம்ப்!

வொஷிங்டன், ஜுன் 04

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் களமிறங்கியுள்ள டொனால்ட் டிரம்ப் (வயது 77) சீன செயலியான ‘டிக் டாக்’கில் புதிய கணக்கு தொடங்கியுள்ளார்.

டிரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது எனக் கூறி டிக் டாக் செயலிக்கு தடை விதிக்க முயற்சிகளை எடுத்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த ஆண்டு நடைபெறும் அதிபர் தேர்தலிலும் அங்கு வேட்பாளராகக் களமிறங்கி உள்ளார். இதனை முன்னிட்டு நாடு முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கிடையே ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்சுக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் அவர் குற்றவாளி என கடந்த வாரம் நீதிமன்றன் தீர்ப்பளித்துள்ளது.

இந்தநிலையில் சீன செயலியான டிக் டாக்கில் டிரம்ப் புதிய கணக்கு துவங்கினார். அவரை டிக் டாக்கில் 30 லட்சத்துக்கும் அதிகமானோர் பின் தொடர்கின்றனர். இவர் ஜனாதிபதியாக இருந்தபோது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என கூறி டிக் டாக் செயலிக்கு தடை விதிக்க பல்வேறு முயற்சிகளை எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் தற்போது அவரே டிக் டாக்கில் இணைந்துள்ளமை விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர் தேர்தல் பிரசார உத்திக்காக டிக் டாக்கில் இணைந்து இருக்கின்றார் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# ஆரம்பித்தது பேரம் பேசல்!

தொடர்ச்சி▲

வாக்கு எண்ணிக்கை விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 290 தொகுதிகளுக்கு மேல் முன்னணியில் இருக்கிறது. இதில் பா.ஜ.க. மட்டும் 241 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. கடந்த தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த பா.ஜ.க. இந்த முறை கூட்டணி தயவில் மட்டுமே ஆட்சி அமைக்கும் நிலையில் உள்ளது.

அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளின் “இண்டியா” கூட்டணி 233 தொகுதிகளில் தற்போது முன்னிலையில் உள்ளன. ஆட்சி அமைக்க 272 இடங்கள் தேவைப்படும் நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகளுடனும், மற்ற தனிக்கட்சிகளிடமும் இண்டியா கூட்டணி சார்பில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

அந்த வகையில் பீஹாரில் நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 14 இடங்களில் வென்றுள்ளார், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சி 16 இடங்களிலும், பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

### துணை பிரதமர்

இந்த கட்சிகளிடம் இண்டியா கூட்டணி பேச்சு நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதிலும் குறிப்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்பாக இண்டியா கூட்டணியில் இருந்து வெளியேறிபா.ஜ.க. கூட்டணிக்குச்சென்றநிதீஷ் குமாரை மீண்டும் தங்கள் பக்கம் இழுப்பதுடன், அவருக்குதுணைபிரதமர்பதவிதருவதாகவும்உறுதியளித்திருப்பதாகக்கூறப்படுகிறது. மற்ற கட்சிகளிடமும் பேச்சு நடத்தி எப்படியாவது மெஜாரிட்டியை எட்டிவிடலாம் என இண்டியா கூட்டணி கணக்கு போட்டு வருகிறது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 04/06/2024

## கனடிய மத்திய வங்கியின் வட்டி விகித முடிவு நாளை

ஒன்ராரியோ, ஜூன் 04

கனடிய மத்திய வங்கி அதன் புதிய வட்டி விகித முடிவை நாளை (ஜூன் 5) அறிவிக்கவுள்ளது.

மத்திய வங்கி வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு C2





# கனடாவில் இருந்து இந்தியாவிற்கு நேரடி விமான சேவைகள் ஆரம்பம்

ஒன்ராரியோ, ஜூன் 04

இந்தியாவிற்கான தனது விமான சேவையை விரிவுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக எயார் கனடா அறிவித்துள்ளது.

டொரன்டோவில் இருந்து மும்பைக்கு இடைவிடாத விமான சேவையை வழுங்கவுள்ளதாக அது அறிவித்துள்ளது.

இந்த சேவை உள்ளடங்கலாக இந்த ஆண்டில் இந்தியாவுக்கான இடைவிடாத விமானசேவைகளைவிரிவுபடுத்துவதற்கு எயார் கனடா திட்டமிட்டு வருகின்றது.

டொரன்டோ - மும்பை இடையே ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் வாரத்திற்கு நான்கு விமான சேவைகள் இயக்கப்படவுள்ளன. C2



# ஒன்ராரியோ சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் மரணம்; நால்வர் காயம்!

ஒன்ராரியோ, ஜூன் 04

ஒன்ராரியோ மாகாணத்தின் ரெக்ஸ்டேல் நகரில் உயர்நிலைப் பாடசாலைக்கு அருகில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஐவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எட்டோபிகோக் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் நோர்த் அல்பியன் உயர்நிலைப் பாடசாலை வாகன நிறுத்துமிடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ரொறொன்ரோ பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 50 வயதுடைய நபர் ஒருவர் பலியாகியுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து நோர்த் அல்பியன் பாடசாலை மற்றும் அதனுடய்ன இயங்கி வந்த குழந்தை பராமரிப்பு நிலையம் என்பன திங்கட்கிழமை மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிறைட் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு 1.5 மில்லியன் டொலர்கள் அரச உதவி!

ஒன்ராரியோ, ஜூன் 04

பிறைட் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 1.5 மில்லியன் டொலர்களை உதவியாக கனடிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள பிறைட் அமைப்புகளுக்கு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மத்திய அரசு இந்த உதவிகளை வழங்குகிறது.

LGBTQ2S+ செயற்பாடுகளுக்கு எதிரான வெறுப்பு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

நிகழ்வு காப்பீட்டுக்கான செலவுகள், அவசர கால திட்டமிடல், கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கை, ஊழியர்கள், தன்னார்வலர்களுக்கான பயிற்சி ஆகியவற்றிற்கான அதிகரித்து வரும் செலவுகளை ஈடுகட்ட இந்த நிதியை பயன்படுத்த முடியும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, ஜூன் 3ஆம் திகதி திங்கட்கிழமையன்று பிறைட் மாத ஆரம்பத்தை குறிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் பிறைட் கொடி ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெண்கள், பாலின சமத்துவம், இளைஞர்களுக்கான அமைச்சர் மார்சி இயன் இந்த நிதி உதவியை அறிவித்தார்.

பிறைட் கொடி நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்றப்படுவது லிபரல் கட்சியின் ஆட்சியின் கீழ் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஒரு வருடாந்த நிகழ்வாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், மொன்ரியல் நகரில் இருந்து புதுடில்லிக்கான விமான சேவையை நாளாந்த சேவையாகவும் எயார் கனடா விரிவுபடுத்துகின்றது.

கனடாவின் மேற்குப் பகுதியில் இருந்து பயணிப்பவர்களுக்கு, ஒக்டோபர் 27 முதல் இங்கிலாந்தின் இலண்டன் நகரம் ஊடாகவும், கல்கரி நகரில் இருந்து புதுடில்லிக்கு நாளந்தம் பருவ கால விமான சேவைகளையும் அது வழங்கவுள்ளது.

எதிர்வரும் குளிர்காலத்தில் வான் கூவர் நகரில் இருந்து இங்கிலாந்தின் இலண்டன் நகருக்குச் செல்லும் விமானங்கள், புதுடிலிக்குச் செல்லும் விமானங்களுடன் இணைக்கப்படும் வகையில் திட்டமிடப்படும் எனவும் எயார் கனடா அறிவித்துள்ளது.

இந்த புதிய திட்டத்தின் அடிப்படையில்இந்தியாவிற்கு வாரமொன்றிற்கு 25 விமானங்களை இயக்கவுள்ளதாக எயார் கனடா தெரிவித்துள்ளது.




## கனடிய மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கலாம் என்ற ஊகங்களின் மத்தியில் இந்த அறிவிப்பை பலரும் ஆவலாக எதிர்பார்த்துள்ளனர்.

மத்திய வங்கி அதன் முக்கிய கடன் விகிதத்தை கால் சதவிகிதம் குறைக்கும் என நிதிச் சந்தை எதிர்வு கூறல்கள் தெரிவிக்கின்றனர்.

வட்டிவிகிதக்குறைப்புகளுக்கான சாத்தியக்கூறுகள் உள்ளன மத்திய வங்கி ஆளுநர் டிப் மெக்லமும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இந்த முடிவு பொருளாதார தரவுகளால் வழி நடத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்ச் மாதத்தின் 2.9 சதவீதத்துடன் ஒப்பிடும் போது ஏப்ரல் மாதத்திற்கான வருடாந்த பணவீக்கம் 2.7 சதவீத மாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.




# நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது லிபரல் கட்சியின் பார்மாகெயார் சட்டம்

## இனி செனட் சபைக்கு அது அனுப்பி வைக்கப்படும்

ஒன்ராரியோ, ஜூன் 04

ஆளும் லிபரல் கட்சியினரின் பார்மாகெயார் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து இந்த சட்டமூலம் செனட் சபைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

லிபரல் கட்சியினருக்கும், புதிய ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையிலான தேர்தல் இணக்கப்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாக இந்த பார்மாகெயார் சட்டமூலம் அமைந்திருக்கின்றது.

சில கருத்தடை மற்றும் நீரிழிவு மருந்துகளின் முதல்-பணம் செலுத்துவோருக்கு உள்ளடக்கம் வழங்குவதை இந்த சட்டமூலம் உறுதி செய்கின்றது.

மேலும் எதிர்கால முழு அளவிலான உலகளாவிய மருந்துக் காப்பீட்டுத் திட்டத்திற்கும் இது வழியமைக்கிறது.

மாகாண மற்றும் பிராந்திய அரசாங்கங்களுடனான பேச்சுவார்த்தைகளின் பொருளாக இருக்கும் என்பதால், எந்த மருந்துகள் உள்ளடக்கப்படும் என்பது இன்னும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

மூன்றாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும், சுகாதார அமைச்சர் மார்க் ஹொலண்ட் மாகாணங்கள் மற்றும் நகரங்களுடன் இது குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

# மனிடோபா பல்கலைக்கழகம் பகிரங்கமாக பூர்வீகக் குடிகளிடம் மன்னிப்புக் கோரியது

மனிடோபா, ஜூன் 04

பூர்வீகக் குடிகளான இன்யூட் மற்றும் மெடிஸ் சமூகங்களுக்கு ஏற்படுத்திய தீங்கிற்காக மனிடோபா பல்கலைக்கழகம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளது.

பூர்வீகக்குடி சமூகங்களின் அனுமதியின்றி புதைக்கப்பட்ட உடைமைகள் மற்றும் கலாசார கலைப்பொருட்களுடன் மூதாதையர்களின் எச்சங்களை தகாத முறையில் ஏற்றுக்கொண்டு சேமித்து வைத்துள்ளமை தொடர்பில் பல்கலைக்கழகம் ஜூன் 3ஆம் திகதியன்று மன்னிப்பு கேட்டது.

‘எங்கள் வரலாற்றின் பெரும்பகுதிக்கு, இந்த பல்கலைக்கழகம் பூர்வீகக்குடி சமூகங்கள், இன்யூட் மற்றும் மெடிஸ் மக்களுடன் தவறான உறவில் உள்ளது’ என்று பல்கலைக்கழகத் தலைவர் மைக்கேல் பெனாரோச் பழங்குடி சமூக உறுப்பினர்களுடன் ஒரு விழாவில் கலந்துகொண்டிருந்த போது தெரிவித்தார்.

1890களில் தொடங்கி பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர்கள் கல்லறைகள் மற்றும் தவறாகக் கையாளப்பட்ட எச்சங்களை இழிவுபடுத்தினர் என அவர் ஒப்புக் கொண்டார்.

‘எங்கள் வரலாற்று உறுப்பினர்கள் அறிவியல் மற்றும் கல்வியின் பெயரில் அவர்களின் வெட்கக்கேடான மற்றும் இழிவான நடத்தையை நியாயப்படுத்தினர்’ எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




மனிதகுலத்தின் அடிப்படைக் கோட்பாட்டை பல்கலைக்கழகம் உடைத்தது - புதைக்கப்பட்டவர்களை நிம்மதியாக விட்டுவிட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

# கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் வெளிநாட்டு செயற்பாட்டாளர்களுக்கு உதவி

## திங்களன்று வெளியான ஓர் அறிக்கையில் தகவல்

ஒன்ராரியோ,ஜூன்04

தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே, சில கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு செயற்பாட்டாளர்களுக்கு 'தெளிவாக உதவி' செய்யத் தொடங்கினர் என்று திங்களன்று வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை தெரிவித்துள்ளது.

இதில்இந்திய அதிகாரிகளுக்கு இரகசிய தகவல்களை அனுப்புவது உள்ளடங்குவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்மட்ட பாதுகாப்பு அனுமதியுடன் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனட் உறுப்பினர்கள்



குழுவின் அறிக்கை, கனேடிய உளவு நிறுவனங்கள் வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனட் உறுப்பினர்கள் இருவருடனும் உறவுகளை வளர்த்துக் கொண்டதைக் காட்டும் உளவுத்துறை அமைப்பைத் தயாரித்ததாகக் கூறுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவின் தலைவரான லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் மெக்கின்டி, வெளிநாட்டு தலையீடு ஒரு பரவலான தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் எனத் தெரிவித்துள்ளார்.

இது கனேடியர்களின் உரிமைகளையும் ஜனநாயக செயல்முறைகளின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தீர்ப்புகளைப் படிக்காமல் அவை குறித்து எதிர்வினையாற்றும் மக்கள் பிரதிநிதிகள்

## உயர்நீதிமன்றத்தின் நீதிபதி எச்சரிக்கை

ஒன்ராரியோ, ஜூன் 04

மக்கள் பிரதிநிதிகள் நீதிமன்றத் தீர்ப்புகளைப் படிக்காமல் நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம் ஏற்படும் அபயாங்கள் குறித்து உயர்நீதிமன்றத்தின் நீதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் பணிகள் மற்றும் நீதி நிர்வாகம் தொடர்பான பிற விடயங்கள் குறித்து தனது வருடாந்த ஊடக சந்திப்பின் போது உயர் நீதிமன்ற நீதிபதி ரிச்சர்ட் வாக்னர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்த தவறான தகவல்கள் பரவுவது குறித்தும், அரசியல்வாதிகள் தீர்ப்புகளை எந்த நீதிபதி அளித்தார் என்பதன் அடிப்படையில் விமர்சிப்பது குறித்தும் தான் கவலை கொண்டுள்ளதாக வாக்னர் குறிப்பிட்டுள்ளார்.



# கல்வி உதவித் தொகை கொடுப்பனவு தொடர்பில் ஒன்றாரியோ மாகாணத்தில் கிளம்பும் சர்ச்சைகள்

ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தின் கல்வி உதவித் தொகை கொடுப்பனவு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் பெற்றோருக்கு உதவும் நோக்கில் இவ்வாறு உதவுத்தொகை வழங்கப்பட்டது.

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக மாகாண அரசாங்கம் சுமார் 1.1 பில்லியன் டாலர் கொடுப்பனவுத் தொகையை பெற்றோருக்கு வழங்கியுள்ளது.

மொத்தமாக நான்கு கட்டங்களாக இந்த கொடுப்பனவுத் தொகையை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மில்டன், பிரம்டன், மிஸ்ஸசாகா மற்றும் பேரி ஆகிய பகுதிகளில் அதிகளவான கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொடுப்பனவுத் தொகைக்காக சுமார் 5.9 மில்லியன் விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் இந்த கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட்டதாகக் கூறப்படும் தகவல்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ மாகாணத்தில் கொடுப்பனவுத் தொகை



வழங்கப்பட்டதாக கூறப்படும் சில முகவரிகள் அந்த மாகாணத்தில் இல்லாதவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில பெற்றோருக்கு இந்த கொடுப்பனவு தொகை கிடைக்கப்பெறவில்லை எனவும் அந்தத் தொகையை ஏற்கனவே வேறு ஒருவர் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சுமார் 200க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் ஒன்றோரியாவின் குறைகேள் அதிகாரி விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.




# பிரின்ஸ் எட்வேர்ட் ஐலண்டில் மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட இணக்கம்

கனேடிய மாகாணமொன்றில், புலம்பெயர்தல் கொள்கைகளில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், உண்ணாவிரதம் இருந்து வந்த மாணவர்கள், உண்ணாவிரதத்தை இடைநிறுத்த முடிவு செய்துள்ளார்கள்.

கனடாவின் Prince Edward Island மாகாணத்தில் புலம்பெயர் கொள்கைகளில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் தங்கள் எதிர்காலமே கேள்விக்குறியானதால், அந்த கொள்கை மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்திய மாணவர்கள் பலர் கடந்த மாதம், அதாவது, மே மாதம் 24ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்துவந்தார்கள்.

இரண்டு வாரங்களாக அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் நிலையில், மாகாண புலம்பெயர்தல் அலுவலக இயக்குநரான Jeff Young மாணவர்களைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, மாணவர்கள் உண்ணாவிரதம் இருப்பதை இடைநிறுத்த முடிவு செய்துள்ளார்கள்.

அரசு, மாணவர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நேரத்தில், உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு Jeff Young மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார் என மாணவர்களில் ஒருவரான ரூபிந்தர் பல் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் கேட்டுக்கொண்டபடி, உண்ணாவிரதத்தை இடைநிறுத்த தாங்கள் முடிவுசெய்துள்ளனர் எனவும், நல்ல பதில் வரும் என தாங்கள் நம்புகிறார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதம் இருந்த சில மாணவர்கள், திரவ உணவுகளை எடுத்துக்கொள்வதையும் கடந்த செவ்வாயன்று நிறுத்தவே, சிலரது நிலைமை மோசமானது. மாணவர்கள் சிலர் மயங்கிவிழத் தொடங்க, அவர்களை அதிகாரிகள் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கியூபெக் சுற்றுலாப் பயணிகள் சென்ற பஸ் கியூபாவில் விபத்தில் சிக்கியதில் ஒருவர் பலி

கியூபெக், ஜூன் 04

கியூபெக் மாகாணத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று கியூபாவில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், 26 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜூன் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கியூபாவின் சான்டா கிளாரா விமான நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பயணிகள் பஸ்ஸில் மொன்ரியல் நோக்கி விமானத்தில் பயணிப்பதற்காக 38 பயணிகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்தச் பயணிகள் பஸ்ஸிற்கு எதிரே பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸின் மீது மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

அந்த வாகனத்தைச் செலுத்தி வந்த கியூப பிரஜையே உயிரிழந்துள்ளார் பயணிகள் பஸ்ஸில் பயணித்த 26 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஆறு குழந்தைகள் உள்ளடங்குவதுடன், ஒருவரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.